# புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்

## செய்தியாளர்களுடன் சென்று மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆய்வு



**புதுக்கோட்டை,டிச.18-**

புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் அஜய் யாதவ் , கலெக்டர் மு.அருணா, தலைமையில் 15.12.2025 அன்று செய்தியாளர்கள் பயணத்தின்போது, நேரில் பார்வையிட்டார்.

பின்னர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்ஃ தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்கள் நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் பல்வேறு மக்கள்நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இத்தகைய திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்திடவும், பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளை கண்காணித்திடவும், இயற்கை பேரிடர் காலங்களில் கலெக்டர் அவர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றிடவும், மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கு, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் இன்றைய தினம் நேரில் பார்வையிடப்பட்டது.

அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மறமடக்கி ஊராட்சியில், கூட்டுறவுத் துறையின் சார்பில், தாயுமானவர் திட்டத்தின் மூலம் குடிமைப்பொருட்கள் வீடுகளுக்கு நேரடியாக சென்று வழங்கப்படுவது குறித்தும், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.39.12 லட்சம் மதிப்பீட்டில் திருநள்ளூர் - வடக்கு கொத்தமங்கலம் இணைப்பு சாலை பலப்படுத்தும் பணியினையும், அறந்தாங்கி நகராட்சி, அக்ரஹாரம் சாலையில், தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (2024 - 2025) -ன்கீழ், ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் பழுதடைந்த தார் சாலையினை சீரமைக்கும் பணியினையும், வீரமாகாளி குளம் பகுதியில், குளம் மேம்படுத்துதல் திட்டம் (2024 - 2025) -ன்கீழ், ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணியினையும், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆளப்பிறந்தான் ஊராட்சியில், ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினையும் செய்தியாளர்கள் பயணத்தின்போது, நேரில் பார்வையிடப்பட்டது. மேலும் இப்பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர தொடர்புடைய அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசின் மூலம் பொதுமக்களின் நலனை மேம்படுத்திடும் வகையில் செயல்படுத்தப்படும் இத்தகைய வளர்ச்சித் திட்டப் பணிகளை அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்ஃ தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவன நிர்வாக இயக்குநர் அஜய் யாதவ்;, தெரிவித்தார். இந்த ஆய்வுகளின் போது, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் செல்வி.இ.அபிநயா, அறந்தாங்கி நகராட்சி ஆணையர் கனிராஜ், கூட்டுறவு துணைப் பதிவாளர் (அறந்தாங்கி சரகம்) எழிலரசு, அறந்தாங்கி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன், அரசமணி, வட்டாட்சியர் கருப்பையா, கூட்டுறவு சங்க சார் பதிவாளர் கருப்பசாமி, பணி மேற்பார்வையாளர் சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# பெரம்பலூர் மாவட்டம் பசும்பலூர் ஊராட்சியில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி

## பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டனர்



**பெரம்பலூர்,டிச.18-**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, பசும்பலூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களை விளக்கும் வகையில் (17.12..2025) புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் பொதுமக்களுக்கு சென்று சேர்க்கும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தினந்தோறும் கிராம ஊராட்சிகளில் வீடியோ படக் காட்சிகள் நடத்துதல், பொது மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் தமிழக அரசின் திட்டங்களை விளக்கும் வகையிலும், தமிழ்நாடு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், கலெக்டர், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்ட அரசு விழாக்களின் தொகுப்புகளை சிறு புகைப்படக் கண்காட்சிகளாகவும் நடத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் தமிழக அரசின் திட்டங்களை விளக்கும் வகையிலான புகைப்படக் கண்காட்சி வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, பசும்பலூர் ஊராட்சியில் நடத்தப்பட்டது.

இக்கண்காட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் , அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கிய நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் கலெக்டர், சட்டமன்ற உறுப்பினர்கள், கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கிய புகைப்படங்கள் மற்றும் பெரம்பலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தன. இந்த புகைப்படக் கண்காட்சியினை சுமார் 400-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆர்வமுடன் பார்த்துச் சென்றனர். பார்வையிட்டவர்களுக்கு தமிழக அரசின் சிறப்பு திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

# சுண்ணாம்புக்கல் கன்கர் குவாரி விரிவாக்கம் செய்வது குறித்து பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம்



**அரியலூர்,டிச.18-**

அரியலூர் மாவட்டம், கீழப்பழுவூர் அருகேயுள்ள செட்டிநாடு சிமெண்ட் ஆலைக்கு சொந்தமான கல்லங்குறிச்சியிலுள்ள நிலத்தில் சுண்ணாம்புக் கல் கன்கர் குவாரி விரிவாக்கம் செய்வது குறித்து, பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம், வாலாஜா நகரத்திலுள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் நடைபெற்ற கூட்டத்துக்கு, கலெக்டர் பொ.ரத்தினசாமி தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துகள்:

அரியலூர் மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் செங்கமுத்து, சுற்றுச்சூழல் ஆர்வலர் தமிழ்களம் இளவரசன் மற்றும் பொதுமக்கள்: சுரங்கங்கள் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளை செய்துத் தரவேண்டும். மருத்துவ முகாம்கள் நடத்தப்பட வேண்டும். காலாவாதியான சுரங்கங்களை மூட வேண்டும். கனரக வாகனங்கள் அதிவேகத்தில் வாகனங்கள் செல்லக் கூடாது. சுண்ணாம்புக் கல் சுற்றிச் செல்லும் போது, அதன் மீது தார் பாய்களை போர்த்தி செல்ல வேண்டும். நிலம் அளித்த விவசாயிகளின் குடும்பத்தினருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை பதிவு செய்தனர்.


கோரிக்கைகளை கேட்டறிந்த கலெக்டர் பொ.ரத்தினசாமி, அவைகளை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்துக்கு அனுப்பி வைத்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். கூட்டத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ராஜராஜேஸ்வரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி திருக்கோயிலில் லட்சதீப விழா

**கும்பகோணம்,டிச.18-**

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயிலில் கார்த்திகை மாத கடைசி சோமவாரத்தை முன்னிட்டு சங்காபிஷேகம் மற்றும் லட்ச தீப விழா நடந்தது. படித்துறை விநாயகர் சன்னதி முதல் தொடங்கி சுவாமி அம்பாள் உட்பட அனைத்துசன்னதிகளிலும் இருபுறமும் பிரத்யேகமாக தடுப்புகள் அமைக்கப்பட்டது. இத்தடுப்புகளில் அகல்விளக்குகள் ஏற்றப்பட்டது. சுவாமிக்கு 1008 சங்காபிஷேகம் மற்றும் மகாதீபாராதனை நடந்தது. கோயில் கட்டளை ஸ்ரீமத் திருச்சிற்றம்பல தம்பிரான் சுவாமிகள் மற்றும் பக்தர்கள் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை கோயில் கண்காணிப்பாளர் ஸ்ரீராம் மற்றும் பணியாளர்கள் செய்திருந்தனர்.

# திருவாரூர் அருகே கூத்தாநல்லூரில் இந்துசமய அறநிலையத்துறைக்கு சொந்தமான நிலங்கள் மீட்பு



**திருவாரூர்,டிச.18-**

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் வட்டம் திருப்பணிப்பேட்டை அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோவிலுக்கு சொந்தமான விடயபுரம் கிராமத்தில் உள்ள ரூ.60 லட்சம் மதிப்பிலான ஆக்கிரமிப்பில் இருந்த 16,487 சதுர அடி இடம் மற்றும் மேல ராதாநல்லூர் கிராமத்தில் உள்ள 20 லட்சம் மதிப்பிலான 5,616 சதுர அடி ஆக்கிரமிப்பில் இருந்த இடம் மீட்கப்பட்டு திருக்கோவில் வசம் கொண்டுவரப்பட்டது. திருவாரூர் இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் ராணி தலைமையில் தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) சரவணன், திருக்கோயில் செயல் அலுவலர் சுரேந்தர்,பரம்பரை அறங்காவலர் கண்ணன்,கிராம நிர்வாக அலுவலர்,வருவாய் ஆய்வாளர்,தீயணைப்பு துறை ஆய்வாளர்கள்,திருக்கோயில் செயல் அலுவலர்கள்,திருக்கோயில் பணியாளர்கள்,காவல்துறை அதிகாரிகள் உடனிருக்க ஆக்கிரமிப்பில் இருந்து நிலங்கள் மீட்கப்பட்டது.

# கும்பகோணத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் மெழுகுவர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம்



**தஞ்சாவூர்,டிச.18-**

நேஷனல் ஹெரால்ட் அமலாக்கத்துறை சோனியா காந்தி ராகுல் காந்தி மீது பொய் வழக்கு போட்டதை கண்டித்து கும்பகோணம் காந்தி பூங்கா அருகில் தஞ்சை வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் டிஆர் லோகநாதன் தலைமையில் மெழுகு வர்த்தி ஏந்திய கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது நிகழ்ச்சியில் வட்டார காங்கிரஸ் தலைவர்கள் மணிகண்டன் மணிசங்கர் அசோக் பன்னிர் செல்வம் மாவட்ட செய்தி தொடர்பாளர் தண்டாளம் சரவணன் முன்னாள் வட்டார தலைவர் வரதராஜன் ஜெயபால் கருப்பூர் ஆனந்த் வில்சன் அமைப்பு சாரா தலைவர் முருகன் வழக்கறிஞர் பிரிவு தலைவர் செந்தில் குமரன் ஆசிரியர் பிரிவு தலைவர் இன்ப ராஜ் மாநகர துணை தலைவர்கள் சீனுவாசன் கணபதி இமானுவேல் மற்றும் வெங்கட் சுப்ரமணி தர்பார் சாதிக் லாரன்ஸ் ஜோஸ்வா மற்றும் பலர் கலந்து கொண்டனர் முடிவில் மாநில பொதுக்குழு உறுப்பினர் மாநகர பொருளாளர் தியாகராஜன் நன்றி கூறினார்..

# தூய்மைப் பணியாளர்களுக்கு அரசு நிர்ணயித்த ஊதியத்தை வழங்க வேண்டும்

## நகராட்சி ஆணையரிடம் மனு

**அரியலூர்,டிச.18-**

தூய்மைப் பணியாளர்களுக்கு அரசு நிர்ணயித்த ஊதியத்தை வழங்க வேண்டும் என்று அரியலூர் நகராட்சி ஆணையர் அசோக்குமாரிடம் ஏஐடியுசி சுகாதார தொழிலாளர் சங்கத்தினர் புதன்கிழமை மனு அளித்தனர்.

அச்சங்கத்தின் சம்மேளன மாநிலச் செயலர் டி.தண்டபாணி தலைமையில் நிர்வாகிகள் நல்லுசாமி ,மாரியப்பன், கோபி, பெரியசாமி உள்ளிட்ட 50}க்கும் மேற்பட்டோர் அளித்த மனுவில், தமிழக அரசு உத்தரவின் படி தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ.10,000 ஊதியமாக வழங்க வேண்டும். அரசு அறிவிக்கும் அகவிலைப்படியை சேர்த்து வழங்க வேண்டும்.28 மாதங்களாக பிடித்தம் செய்யப்பட்ட தொகையுடன் மற்றும் இழப்பீட்டுத் தொகையும் சேர்த்து உடனடியாக வழங்க வேண்டும்.

2009 ஆம் ஆண்டில் இருந்து நிரந்தர தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய உரிய சேமநலநிதியை வட்டியுடன் கூடிய இருப்பு தொகையும் வழங்கிட வேண்டும். துப்புரவு தொழிலாளர்கள் குடியிருக்கும் தெற்கு பெரிய தெருவிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். துப்புரவு தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டிருந்தது.

# பீகார் முதல்வர் நிதிஷ்குமாருக்கு தமிழ்நாடு தவ்ஹீத் வடக்கு மாவட்டம் சார்பில் கண்டனம்

**திருவாரூர்,டிச.18-**

பீகார் முதல்வர் நிதிஷ்குமாரை தமிழ்நாடு தவ்ஹீத் திருவாரூர் வடக்கு மாவட்டத்தின் சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம்.இது குறித்து அதன் மாவட்ட தலைவர் பீர் முகமது வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,பிகார் மாநிலத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் நிதீஷ் குமார் இஸ்லாமிய பெண்ணின் ஹிஜாபை பிடித்து இழுத்துள்ளார். இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. பெண்களின் மரியாதைக்கும்,மத நம்பிக்கைக்கும் எதிரான இத்தகைய அநாகரிகச் செயல், ஒரு முதலமைச்சரிடமிருந்து வெளிப்பட்டது மிகவும் கண்டிக்கத்தக்கது.கூடா நட்பு கேடாய் முடியும் என்பதற்கு உதாரணமாய் ஆகியுள்ளது.நிதிஷ் குமாரின் இந்த நிகழ்வை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் இச்சம்பவத்தை கடுமையாக கண்டிப்பதுடன், பெண்களின் மரியாதையும் மத உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் இதற்காக நிதிஷ்குமார் பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.இவ்வாறு திருவாரூர் (வடக்கு) மாவட்ட தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாவட்ட தலைவர் பீர் முகமது வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

# விவசாயிகள் உயிர்ம வேளாண்மையின் மூலம் நஞ்சில்லா பயிர்களை விளைவித்து ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க வேண்டும்

## கலெக்டர் மீ.தங்கவேல் அறிவுறுத்தல்



**கரூர்,டிச.18-**

கரூர், மணவாடி தனியார் திருமண மண்டபத்தில் (17.12.2025) வேளாண்மைத் துறையின் சார்பாக மாவட்ட அளவிலான உயிர்ம வேளாண்மை கருத்தரங்கம் மற்றும் கண்காட்சியை மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தொடங்கி வைத்தார்.

இக் கருத்தரங்கில் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து அதிக அளவில் நிதிகளை ஒதுக்கி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம் கரூர் மாவட்டத்தில் உயிர்ம வேளாண்மையை விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் மாவட்ட அளவிலான கருத்தரங்கம் நடைபெறுகிறது. இக்கருத்தரங்கின் மூலம் உயிர்ம வேளாண்மையில் இரசாயன உரம், பூச்சிக் கொல்லி மருந்து ஆகியவற்றை தவிர்த்து இயற்கையுடன் இணைந்த உயிரியல் சுழற்சி முறை, இயற்கை உரம் பயன்படுத்துதல் மூலம் பயிர் சாகுபடி செய்யப்படுவதோடு மண்வளத்தையும் பாதுகாப்பதே ஆகும்.

வேளாண்மைத் துறை மூலம் நடப்பாண்டில், உயிர்ம வேளாண் நடைமுறைகளை பின்பற்றி சிறப்பாக செயல்படும் தன்னார்வ விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு சிறந்த உயிர்ம விவசாயிகளுக்கு "நம்மாழ்வார் விருது" வழங்கப்படுகிறது.

இவ்வாறு உயிர்ம வேளாண்மை குறித்து தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களை அனைத்து விவசாயிகளுக்கும் எடுத்துரைத்து அங்கக வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி ஊக்கப்படுத்தும் விதமாக உயிர்ம வேளாண்மை கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடத்தப்படுகிறது. எனவே விவசாயிகள் அனைவரும் உயிர்ம வேளாண்மையின் மூலம் நஞ்சில்லா பயிர்களை விளைவித்து ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க உதவிட வேண்டுமென மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, வேளாண்மைத்துறையின் சார்பாக முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் இயற்கை இடுபொருள் உற்பத்தி மையம் அமைப்பதற்காக ரூ.1.00 இலட்சம் மானியமும், உயிர்ம வேளாண்மை மாதிரி பண்ணைத் திடல் அமைப்பதற்காக ரூ.10,000 மானியமும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விசைத்தெளிப்பான ரூ.2075 மானியமும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் சிறுதானியம்-தார்பாய் விநியோகத்திற்கு ரூ.1000 மானியமும், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் மாண்புழு உரப்படுக்கைக்கு ரூ.3000 மானியமும்,தோட்டக்கலைத் துறையின் சார்பாக தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் நிரந்தர மண்புழு உற்பத்தி கூடாரம் அமைப்பதற்காக ரூ.50,000 மும், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மா ஒட்டுச்செடிக்கு ரூ.12,000 மும் மற்றும் பிரதம மந்திரியின் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்காக ரூ.62,526 மும், மேலும் 5 விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளையும் என மொத்தம் 21 விவசாயிகளுக்கு ரூ.5.11 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் வழங்கினார்.

இக்கருத்தரங்கில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர் வெ.கவிதா, வேளாண்மை இணை இயக்குநர் ச.சிங்காரம், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் தியாகராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செல்வி.உமா, விவசாயிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டம் கோட்டூர் ஒன்றியம், விக்கிரபாண்டியம் ஊராட்சியில் தமிழக அரசின் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி




**திருவாரூர்,டிச.18-**

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் ஒன்றியம், விக்கிரபாண்டியம் ஊராட்சியில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும்வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பாக புகைப்படக்கண்காட்சி நடத்தப்பட்டது. இப்புகைப்படக்கண்காட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைத்த புதிய திட்டங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியது குறித்த புகைப்படங்கள் அமைக்கப்பட்டிருந்தது. மேலும், தமிழ்நாடு அரசின் பல்வேறு சிறப்பு திட்டங்களான மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் திட்டம், இல்லம் தேடி கல்வி, நான் முதல்வன், வானவில் மன்றம், பசுமை தமிழகம், நம்ம பள்ளி பவுண்டேசன், நம்ம பள்ளி, நம்ம பெருமை, எண்ணும் எழுத்தும், கல்லூரி கனவு, மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகள்;, கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு திட்டம், விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்குதல், விவசாயிகளுக்கு ஒரு லட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமை பெண் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினர்களுக்கு தொழில் சார் கடனுதவி வழங்குதல், அர்ச்சகர்கள் மற்றும் கோவில் பூசாரிகளுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கும் திட்டம், புதிய தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், மேலும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர், அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் கலெக்டர் அவர்களால் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் உள்ளிட்ட புகைப்படங்கள் இடம்பெற்றிருந்தது. இப்புகைப்படக்கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

# அரியலூரில் காங்கிரஸ் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



**அரியலூர்,டிச.18-**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தில் மகாத்மா காந்தி பெயர் நீக்க நடவடிக்கை எடுக்கும் மத்திய அரசை கண்டித்து அரியலூர் பேருந்து நிலையம் அருகேயுள்ள காந்தி சிலை முன் காங்கிரஸ் கட்சியினர் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

ஆர்ப்பாட்டத்துக்கு அக்கட்சியின் மாவட்டத் தலைவர் ஆ.சங்கர் தலைமை வகித்தார். நகரத் தலைவர் சிவக்குமார், மாவட்ட துணைத் தலைவர் ஏ.பி.எஸ்.பழனிசாமி, வட்டார தலைவர்கள் பாலகிருஷ்ணன், திருநாவுக்கரசு, கர்ணன், கங்காதுரை, மாவட்ட துணைத் தலைவர்கள் ஏ.பிஎஸ். பழனிச்சாமி, கலைச்செல்வன், மாவட்டச் செயலர் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு முழக்கமிட்டனர்.

